★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5630

நம் நாடு

தமிழகத் தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 1உ வியாழன் (14—6—56) ★ ★ வெளியீடு: ஆனி 2உ வெள்ளி (15—6—56) [இதழ் 309

பேரன் - பேத்தியர் உள்ளவர்: 'போர்'கள் பல கண்டவர் மறைவு!

பாகிஸ்தானிலேயே மிக வயது முதிர்ந்தவர் என்று நம்பப் படும் அபீஸ் உல்லா என்பவர் பெஷாவருக்கு அருகேயுள்ள பியாராபாய் என்ற இடத்தில் கடந்த ஞாயிறன்று இறந்துவிட்டார்; அவருக்கு வயது 108.

அவர் 19-ம் நூற்றாண்டின் இடையில் ஆங்கிலோ—ஆப்கன் போரில் பங்கு கொண்டவர். ஆங்கிலோ—சீக்கிய போராட்டத்தையும், சீக்கிய—ஆப்கன் போராட்டத்தையும் அவர் கண்டுள்ளார். அவருக்குள்ள பிள்ளைகள், பேரன் பேத்திமார்கள், அவர்களுக்கும் பிள்ளைகள் ஆகியோரின் எண்ணிக்கை 90 ஆகும்.

காங்கிரஸ் ஆட்சியில் தாழ்த்தப்பட்டோர் நிலை

'பிறர் உழைப்பில் வாழும் செல்வர்கள் கொழுத்து வருகின்றனர்'

'அதே நேரத்தில் உழவர்கள் வாழ்வு மோசமாகிக்கொண்டே போகிறது'

'தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு ஜாதி முறை ஓர் தடைக்கல்லாகும்'

ஜெகஜீவன்ராம் இடிமுழக்கம்

கயா, ஜூன் 13—

"உழவர்களின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே போகிறது. அதே நேரத்தில், எந்தவித உடலுழைப்பும் இல்லாத செல்வந்தர்கள், பிறர் உழைப்பின் பலனைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர்.

"இந்துக்களுக்குள் தாழ்த்தப்பட்டுக்கிடக்கும் வகுப்பாரின் முன்னேற்றத்திற்கு சாதி முறை பெரும் தடைக்கல்லாகும்.

"சாதி இந்துக்களைக் காட்டிலும், எளிமையானவர்களாகவும், அறிவுடையவர்களாகவும், நாணயமானவர்களாகவும், தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் சாமானிய மக்கள் இருந்து வருகின்றனர்."

இவ்வாறு, பீகார் தாழ்த்தப்பட்டோர் எட்டாவது மாநாட்டைத் துவக்கி வைத்து, மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் குறிப்பிட்டுள்ளார்.

கொத்தலாவலை அரசாங்கத்தின் அழிவு வேலை!

பண்டாரநாயகா குற்றச்சாட்டு

"கொத்தலாவலையின் தலைமையில் இருந்த அரசாங்கம், உள்நாட்டுப் பொதுப் பாதுகாப்புத் துறை சம்பந்தமான—இலங்கையில் பிரிட்டிஷ் தளங்கள் சம்பந்தமான சில இன்றியமையாத தஸ்தாவேசுகளை அழித்துவிட்டது"

என்று, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

மலைவாழ் மக்களின் நிர்வாண ஊர்வலம்

குடியிருந்த இடங்களைப் பறிமுதல் செய்ததால் நேரிட்ட விளைவு

மத்திய—மாநில சர்க்கார்கள் போக்கின் எதிரொலி

திருச்சூர், ஜூன் 13—

மலம்புழா அணைத்திட்டங்களுக்குத் தங்கள் நிலங்களைப் பறித்துக்கொண்டதால், மலம்புழா மலைகளில் வசிக்கும் 300 பழங்குடிக் குடும்பங்கள் குடியிருக்கவும், வேலை செய்யவும் இடமில்லாமல் போய்விட்டதென்றும், எவ்வளவோ கேட்டுக்கொண்டும் இந்தியப் பேரரசும், மாநில அரசியலாரும் ஒன்றும் செய்யவில்லையென்றும், எனவே, அதிகாரிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவிக்க பாலக்காடு நகரிலுள்ள முக்கியத் தெருக்களின் வழியாக நிர்வாணமாக ஊர்வலம் சென்று 'ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்' முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்வதென்று 'மலம்புழா பழங்குடி மக்கள் சிறுவனம்' தீர்மானித்திருக்கிறது.

'கோரிக்கைகளை எல்லாம் சர்க்கார் புறக்கணித்தது'

'பெரும்பாலான ஊழியர்கள் கடனாளிகளாக மாறிவிட்டனர்'

சென்னை சட்டசபை உறுப்பினர்களுக்கு என். ஜி. ஓ.-க்களின் திறந்த மடல்

சென்னை, ஜூன் 13—

கெஜட் பதிவாகாத ஊழியர்கள், சென்னை சட்டசபையிலிருக்கும் 285 உறுப்பினர்களுக்கும் அனுப்பியுள்ள தங்களின் குறைபாடுகளைக் குறித்த திறந்த மடலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளதாகத் தெரிகிறது:—

"1921-ம் ஆண்டிலிருந்தே ஊதிய உயர்வு கோரினோம்; ஆனால், கோரிக்கைகளைச் சர்க்கார் புறக்கணித்து விட்டது!

"மத்திய சர்க்காரில் தோட்டி அல்லது விதிகூட்டுபவர்கள் கூட ரூ. 40 கிராக்கிப்படி வாங்குகின்றனர்; ஆனால், பி. ஏ. பட்டதாரியான குமாஸ்தா ஒருவர் சென்னை மாநில சர்க்காரில் ரூ. 22 தான் கிராக்கிப்படி வாங்குகிறார்!

"என். ஜி ஓ.-க்களில் பெரும்பான்மையானவர் கடனாளியாகப்போய்விட்டனர்!"

கோவா எதிர்காலம்

போர்ச்சுக்கல் சர்க்காருக்கு வல்லரசுகள் வற்புறுத்தல்

பெல்கிரேம், ஜூன் 13—

"இந்தியாவிலுள்ள பிரெஞ்சுத் திட்டுக்கள் சட்டப்படி இந்தியாவுக்கு மாற்றப்பட்டுவிட்டதால், இந்தியாவில் இருக்கும் போர்ச்சுகல் திட்டுக்களைக் குறித்து ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு இந்திய அரசினருக்கும்—போர்ச்சுகல் சர்க்காருக்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற இயலும்," என்று வின்பன் பத்திரிகைகள் செய்தி கூறுகின்றனவாம்.

போர்ச்சுகல் சர்க்காரை நியாயமாக நடந்துகொண்டு, இந்திய அரசியலாருடன் சமாதானப் பேச்சுகள் நடத்தி, நேசப்பான்மையில் போர்ச்சுகல் திட்டுக்கள் பற்றி ஒரு இறுதி முடிவுக்கு வருமாறு மேற்கு வல்லரசுகள் வற்புறுத்தியிருக்கக்கூடுமென நடுநிலைமையாளர்கள் கருதுகின்றனராம்.

கவர்னர்-ஜெனரல் சுடப்பட்டாராம்!

கோவா கவர்னர் - ஜெனரல் பாவோவின் கார்மீது சென்ற திங்களன்று கோவா தேசியவாதிகள் 'ஸ்டென்' துப்பாக்கியால் சுட்டதால் அவருக்குக் காயம் ஏற்பட்டதென்றும், கவர்னர் - ஜெனரலுடன் காவலுக்குச் சென்ற போர்ச்சுகல் போலீசார் உடனே பதிலுக்குத் திருப்பிச் சுட்டதால் கோவா தேசியவாதியொருவர் இறந்தாரென்றும் தெரிய வருகிறது.

கோவா தேசியவாதிகள் போர்ச்சுகல் போலீசார்போல் உடையணிந்து கவர்னர் - ஜெனரலின் வருகைக்காக காத்திருந்து, கார் வந்ததும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

கவர்னர் - ஜெனரலுக்கு இலேசான காயமேற்பட்டதாகவும், மற்றும் இருவர் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும், தாக்கியவர்களைப் போர்ச்சுகல் போலீசார் தீவிரமாகத் தேடி வருவதாகவும் தெரிகிறது.

நடுத்தரக் குடும்பங்களின் மனவேதனை!

சென்னை, ஜூன் 13—

அரிசி, சர்க்கரை, எண்ணெய், புளி, மிளகாய், சீக்காய் ஆகியவற்றின் விலைகள் படிப்படியாக உயர்ந்துவருவதின் விளைவாக நடுத்தர வகுப்பினர்களும், குறிப்பிட்ட வருமானமுள்ளவர்களும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உதாரணமாக, ஆறு திங்களுக்கு முன்பு வீசை ரூ. 2 முதல் ரூ. 2-4-0 ஆக இருந்த நல்லெண்ணெய் விலை திடீரென்று ஏறி, சென்ற திங்கள் ரூ. 3 ஆக இருந்தது; இரு வாரங்களுக்கு முன்பு ரூ. 2-14-0 ஆக இறங்கி மீண்டும் இப்போது ரூ. 3-1-0 ஆக ஏற்றம் கண்டிருக்கிறது.

10,000 'அம்பர் சர்க்கா' உற்பத்தியாகும்!

புதுடில்லி, ஜூன் 12—

'அம்பர் சர்க்கா' உற்பத்திக்காக இந்தியப் பேரரசு தயாரித்துள்ள திட்டத்தின்படி 10,000 'அம்பர் சர்க்கா'க்கள் உற்பத்திச் செய்யப்படுமாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு'

நான்காம் ஆண்டு துவக்க விழா மலர்

★

★ கழக முன்னணித் தோழர்களின் கருத்தோவியங்கள் மலரைச் சிறப்பிக்கின்றன.

★ 'கழகமும்—தேர்தலும்' குறித்து, பொதுச்செயலாளர் விளக்கம் தருகிறார்.

★ 'நம் நாடு' பிறந்த நிலையை 'உயிரோவிய'மாகத் தீட்டியுள்ளார், துணைப் பொதுச்செயலாளர்.

★ ஏகாதிபத்தியத்தின் 'பிடி'யிலிருந்து 'விடுதலை' பெறத் துடிக்கும் மக்களின் உள்ளுணர்வை—'பலி' பீடத்தில் தங்களை அர்ப்பணிக்கும் மக்களின் 'தியாக உள்ளத்'தை எழுத்தோவியமாகத் தந்துள்ளனர் கழக எழுத்தாளர்கள்.

★

உங்கள் இதழ்களைப் பெற்றுக் கொள்ளத் தவறிவிடாதீர்கள்!

12 பக்கங்கள்: விலை அணு 2

15—6—56-ல் சென்னை நகரிலும்,
16—6—56-ல் மற்ற இடங்களிலும்
கிடைக்கப்பெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மத்தியக் கிழக்குப் பகுதியில் 'ஏகாதிபத்தியச்சின்னம்' மறைகிறது!

சூயஸ் கால்வாயிலிருந்து 5,07,008 பிரிட்டிஷ் போர்வீரர்கள் வெளியேற்றம்

போர்ட்செட், ஜூன் 13—

இன்று 'போர்ட்செட்'டிலிருந்த ஆங்கிலேயரின் கடைசி இராணுவப் பகுதி, அதைவிட்டு வெளியேறி விட்டது.

சூயஸ் கால்வாய் பகுதிகளில் மொத்தம் 5,07,008 பிரிட்டிஷ் போர்வீரர்கள் இருந்தனர். இன்றோடு அவர்கள் அனைவரும் சூயஸ் கால்வாய் பகுதிகளைவிட்டு வெளியேறுகின்றனர்.

ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்ட கப்பல் தளம் எகிப்து நாட்டிடம் இன்று ஒப்படைத்ததை ஒரு கொண்டாட்டமாக நடத்தினர்.

1954-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ந் தேதியன்று ஏற்பட்ட ஆங்கிலேயர்-எகாதிபத்தியர்ஒப்பந்தப்படி 20 மாதங்களில் ஆங்கிலேயர்களின் துருப்புக்கள் வெளியேறிவிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது; அதன்படியே, ஆங்கிலேயர்களின் படைகள் சிறிது சிறிதாகக் கடந்த 20 மாதங்களாக வெளியேறிக்கொண்டு வந்தன; இன்று கடைசிப் படையும் வெளியேறிவிட்டது.

வெளியேறும் ஆங்கிலேய இராணுவத்தினர் கப்பலில் சைப்ரசுக்குப் புறப்பட்டனர்; அப்போது சம்பந்தப்பட்ட பத்திரங்களில் கையொப்பமிடப் பல எகிப்து அதிகாரிகள் வந்திருந்தனர்.

ஆங்கில ஏகாதிபத்தியம் மத்தியக் கிழக்குப் பிரதேசத்தைவிட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14-6-56 வியாழன்

வெட்கங்கெட்ட வீராப்பு!

அறையில் ஆடப்பட்டுவந்த அதிகார அரசியல் திருக்கூத்து, அம்பலத்திலும் அரங்கேற்றப்பட்டுவிட்டது. இனி அந்த ஆபாசத் திருக்கூத்தை, கண் படைத்தவர் அனைவரும் கண்டு களிக்கலாம்.

மக்களின் வறுமையைப் போக்கி வளத்தைப் பெருக்கும் திட்டத்தை காந்திய வழியில் நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பது காங்கிரஸ் கட்சி ஒன்றுதான், அதுபோன்ற திட்டமோ, அத்திட்டத்தை நிறைவேற்றும்வகையோ பெற்றிருக்கும் கட்சி வேறு எதுவும் கிடையவே கிடையாது என இந்தியப் பிரதமர் நேரு முதல் சாதாரண காங்கிரஸ் தொண்டர்வரை தினந் தினம் சொல்லி வருகின்றனர். அதையே கிளிப்பிள்ளைபோல் முதலமைச்சர் காமராசரும், தமிழ் நாட்டில் பேச்சு பேச்செனப் பீத்திவருகிறார்.

அவ்வாறு பீத்தும் நேரத்திலேயே, அந்தக் கனவான், நமது கழகத்தையும் களங்கப்படுத்திப் பேசுகிறார். இவர்களிடம், மக்கள் ஏழ்மை அழிக்கத் திட்டமுண்டா, செயலாற்றும் திறனுண்டா, நாடகக்காரர்களான இவர்களுக்கு நாடாள அருகதை உண்டா, அந்த அறிவாற்றல் தங்களுடன் பிறந்தவையாயிற்றே எனறெல்லாம், அரசாங்க அதிகாரிகளும், பாதுகாப்புத் துறையினரும், பதவிக்கு நாவைக் குழைத்துக் கொண்டிருக்கும் சொந்தக் கட்சியினருமான கூட்டத்திலுள்ள சில பேர் சொக்கிப் போகும் வகையில், முதலமைச்சர் சொல்மாரிப் பொழிந்து வருகிறார்.

திராவிட நாடு ஏற்பாட்டினுல் நாட்டில் பெருங்குழப்பம் ஏற்பட்டுவிடும்; சீரழிவுக்கு இடம் கிடைத்துவிடும் என்று கூட முதலமைச்சர் பீதி கிளப்பிவருகிறார்.

திராவிட நாடு பிரிந்துவிடுவதால், தாம் கூறுகிறபடி எப்படி பெருங்குழப்பம் ஏற்படும்; சீரழிவு ஏன் ஏற்படவேண்டும், அதற்கான காரணம் யாவை என்பன பற்றி எல்லாம், அவர் விளக்கம் தருவது கிடையாது. இனியும் தரப்போவதும் கிடையாது.

தாம் கூறுகிறோம்; அதை மக்கள் நம்பியே தீருவர் என்ற அந்தக் கால நம்பிக்கையில், நமது கழகத்தைப் பற்றி ஆபாசமாகக் கூறிவருகிறார் முதலமைச்சர். காலம் மாறிப்போச்சு என்பதை தெளிவாகத் தெரிந்துகொள்ளும் காலம் அவருக்கும் விரைவில் வந்தேதீரும்.

தொடர்ந்து கழகத்தைத் தூற்றிவரும் போக்கு கண்டு, தேர்தல் பித்தலாட்டப் பிரச்சாரத்தில் அவர் கால் வைத்துவிட்டார் எனக் கருதுவாரும் உண்டு. அந்தக் கருத்தில் ஓரளவு தான் உண்மை இருக்கிறது.

அவர் தொடர்ந்து பிதற்றி வருவதற்கு மற்றொரு முக்கிய காரணம் இருக்கிறது. தம்மைப் பதவியிலிருந்து விரட்ட, சொந்தக் கட்சிக்குள்ளேயே பிறந்து தீவிரமாக வளர்ந்து வரும் ஆச்சாரியார் எதிர்ப்பிலிருந்துத், தம்மைக் காத்துக்கொள்ளும் அரிய முயற்சியின் ஒரு கூறுதான், அவர் சுற்றுப்பயணம்.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்து, காங்கிரஸ் கட்சிக்குள்ளாக இருந்துவரும் ஆச்சாரியார்—காமராசர் கோஷ்டிப் பிணக்கிற்கு, ஒரு சிறந்த வழக்குப் பொருளாகிவிட்டது.

காமராசர் கோஷ்டியை பதவியிலிருந்து விரட்ட, காங்கிரஸ் மேலிடத்தின் ஆதரவை ஆச்சாரியார் கோஷ்டி பெற்றாக வேண்டும். எனவே, மேலிடத்திற்கு விருப்பமான தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை ஆதரித்தலே அதற்கான சிறந்த வழியாகும் என்பது ஆச்சாரியார் கோஷ்டியினர் உள்ளக்கிடக்கை.

தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்தை ஆச்சாரியார் கோஷ்டி ஆதரித்து வருவதில் பொதிந்திருக்கும் பிரத்தியட்ச உண்மை இதுவேயாகும்.

இந்த உண்மையை முதலமைச்சர் காமராசரும அறிந்தே இருக்கிறார். தாமும் சார்ந்திருக்கின்ற காரணத்தினுல்தான், தட்சிணப் பிரதேசத்தைக் குறித்துத் திட்டவட்டமாக எதுவும் கூறாது இதுவரையில் அவர் இருந்துவந்திருக்கிறார்.

அதே போக்கில் பேசாமடந்தையாக முதலமைச்சரால் இருந்துவர முடியவில்லை. அந்த மவுனத்தைக் கலைத்து, தட்சிணப் பிரதேசத்தை எதிர்த்துப் பேச வேண்டிய கட்டாயத்திற்கு அவரும் வந்து விட்டார்.

தட்சிணப் பிரதேச அமைப்புக்கு ஆதரவாக ஆச்சாரியாரின் கோஷ்டியின் பிரச்சாரம் கூடுதலானதே, முதலமைச்சரின் மவுன முறிவுக்குக் காரணமாகும். ஆதரவு பேச்சினுல் தமக்கு எதிராக பெரியதோர் எதிர்ப்பு காங்கிரஸ் கட்சிக்குள்ளாக உருவாகிவிடக் கூடுமோ என்ற அச்சம் காமராசருக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே, அந்த அச்சத்தின் விளைவாக, மேலும் எதிர்ப்பை வளரவிடாது தடுக்கவேண்டும என்றக் கருத்துடன், அவர் விவாதத்தில் தலையிட்டு இருக்கிறார்.

தட்சிணப் பிரதேச அமைப்பை ஆதரித்துவருபவர்கள், 'தரங்கெட்டவர்கள்' என முதலமைச்சர் சித்தரிக்கிறார்! 'மாகாணத்திலோ, மத்தியிலோ மந்திரி பதவி பெற ஆசைக் கொண்டிருப்பவர்கள்' எனப் பேசுகிறார்!

தட்சிணப் பிரதேச அமைப்பின் சார்பில் வழக்காட முனைந்திருக்கும் கோஷ்டியின் தலைவரான ஆச்சாரியார், மவுனம் கலைந்து இவ்வாறு பேசிடும் நிலையைத்தான் முதலமைச்சரிடம் இருந்து எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்ததற்கு இணங்க முதலமைச்சரும மவுனம் கலைந்து தட்சிணப் பிரதேசம் குறித்து வெளிப்படையாகப் பேசத் துணிந்திருக்கிறார்.

"நாங்களா தரங்கெட்டவர்கள்? அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானத்திற்கு ஆதரவுதேடும் நாங்களா தரங்கெட்டவர்கள்?" எனக் கேள்வி அம்புகளைத் தொடுத்துக் கொண்டே ஆச்சாரியார், அரசியல் களத்தில் குதித்துவிட்டார்.

இனி அவரைத் தொடர்ந்து அமைச்சர்களான சுப்பிரமணியமும், சேதுபதியும் சல்லடம் கட்டத்தான் போகிறார்கள்!

கண்ணுக்கும் கருத்துக்கும் அது விருந்தாக அமைவது நிச்சயம்!

இந்த அவலட்சணத்தில் உள்ள காங்கிரஸ் கட்சிதான், மக்கள் ஏழ்மையைப் போக்க திட்டம் கொண்டிருக்கும் கட்சியாம்! நாடாளத் தெரிந்த அரசியல் அமைப்பாம்! வெட்கங்கெட்ட வீராப்பு!

தட்சிணப் பிரதேசம்

பட்டத்தின் பதைபதைப்பு

குழித்துறை, ஜுன் 10—

"இன்று சில காங்கிரஸ்காரர்கள் தட்சிணப் பிரதேசம் என்று கூறித் திரிகின்றனர்; காங்கிரஸை நிலைக்கச் செய்யவே இப்படி யோசிக்கப்படுகிறது.

"சென்னை அமைச்சர் சுப்பிரமணியம் இரு மொழி நாடுகள் வேண்டுமெனகிறார்; திருவிதாங்கூரிலுள்ள ஆற்றுத் தண்ணீரைத் தட்டிப் பறிக்கவே அவர் போடும் திட்டம் இது!

"தட்சிணப் பிரதேசம் என்று கூறும் இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்கு கொஞ்சமும் மனச்சாட்சி இல்லையென்று நான் கூறுவேன்,"

என்று, திரு-கொச்சி பிரஜா சோஷலிஸ்டு கட்சித் தலைவர் பட்டம் தாணு கூறியுள்ளார்.

சென்னை இராஜ்யம் வளம் பெறுவதற்கு எதிர்ப்பு!

பரம்பிக்குளம் திட்டம் உருவாவதை தடுக்க முயற்சி

திரு—கொச்சி கம்யூனிஸ்டுக் கட்சி சல்லடம் கட்டுகிறது

திருவனந்தபுரம், ஜுன் 7—

"பரம்பிக்குளம் திட்டம் குறித்து திரு-கொச்சிஇராஜப்பிரமுகரின் ஆலோசகர் எத்தனை விளக்கங்கள் கொடுத்தாலும் இந்த மாநில மக்களின் ஐயத்தை நீக்கிவிடாது. ஒரு குடியரசு அரசியலார் திரு-கொச்சியில் ஆட்சியில் இல்லாத நேரத்தில், திரு-கொச்சி நதி தண்ணீரை ஆக்கிரமித்துக்கொள்ள சென்னை அரசியலார் முயற்சி செய்வதாகவே இந்த மாநில மக்கள் கருதுவார்கள், அதற்குத் தகுந்த காரணங்களும் உண்டு,"

என்று, திரு—கொச்சிப் பொதுவுடைமைக்கட்சிமாநிலக்குழு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

மேலும், திரு—கொச்சியில் இராசப்பிரமுகரின் ஆலோசகரின் ஆட்சி மக்களின் எண்ணத்திற்கு எதிரானதாக இருந்து வருவதாகவும், எனவே, ஆலோசகரின் ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 'நர்சரி' பள்ளிக்கூடங்களுக்காக மாநில சர்க்கார்களுக்கும் சேவா நிறுவனங்களுக்கும் மொத்தம் ரூ 6,51,892 வழங்கப்பட்டது.

1948ல் பட்டம் பதவியிலிருக்கையில் 'தார்' குழுவை எதிர்த்தாராம்!

காங்கிரஸ் மேலிடத்திற்குத் தந்தி அனுப்பியது சிலருக்குப் பிடிக்கவில்லையாம்!

குழித்துறை, ஜுன் 10—

"நான் 1948-ல் காங்கிரசில் முதலமைச்சராக விருந்தபோது வந்த 'தார்' குழுவை இங்கு வரவேற்க வேண்டாமென்று 500 வார்த்தைகள் கொண்ட தந்தியை காங்கிரஸ் மேலிடத்திற்கு அனுப்பினேன். இது சில காங்கிரஸ் நண்பர்களுக்குப் பிடிக்கவில்லை.

"நாட்டுப் பிரிவினை ஓர் ஆபத்தான கொள்கை என்று நான் அன்றே சொல்லி அதனை ஆதரித்தேன்; அதை இப்போதும் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். அதன்படி, 'ஜெ. வி. பி. ரிப்போர்ட்'டும் அப்படியே இருந்தது.

"பின்னர், ஆந்திராவில் பொட்டி சிராமுலுவின் இரத்தச் சாட்சியில் உருவானது ஆந்திரா பிரிவினை; அதைத் தொடர்ந்து பணிக்கர் நம்மை ஆபத்தில் சிக்கவைத்தார்,"

என்று, பட்டம் தாணு பிள்ளை, கூட்டமொன்றில் கூறியுள்ளார்.

'ஆண்டவன் பெயரை உச்சரித்து அண்டை வீட்டுக்காரனை மோசடி செய்பவன் ஆஸ்திகனல்ல'

சங்கராச்சாரியார் கடிதத்திற்கு விநோபா பாவே பதில்

காஞ்சீபுரம், ஜூன் 9—

"கடவுளின் பெயரை சதா ஜெபித்துக்கொண்டு, அண்டை வீட்டுக்காரனை மோசம் செய்ய விரும்புகிறவன் ஆஸ்திகனல்ல; ஆனால், கடவுளின் பெயரையே உச்சரிக்காமல் மனிதவர்க்கத்திடம் அன்பும், இரக்கமும் கொள்பவன் உண்மையான ஆஸ்திகன். கடவுளைக் காப்பாற்றும் கவலை நமக்கு வேண்டியதில்லை; அவருக்குத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் வல்லமை உண்டு'

என்று ஆச்சாரிய விநோபா பாவே, சங்கராச்சாரியாரின் கடிதத்திற்கு எழுதியுள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், 'கடவுள் என்பது வெறும் சொற்றொடர் மட்டுமல்ல; மனிதனின் உள்ளத்தில் இடம் பெற்றுள்ள சிறந்த உணர்ச்சியே கடவுள். அன்பு, தயை போன்ற குணங்களை பூஜிப்பதுதான் கடவுளைப் பூஜிப்பதாகும்' என்றும் கூறியுள்ளார்.

குறிப்பு:—இதே கருத்தை, காஞ்சியில் நடைபெற்ற சர்வோதய மாநாட்டில், இராசகோபாலாச்சாரியார் அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனத்திற்குரியதாகும்.

காவிரி நதி பாயும் பகுதியில் எண்ணெய் வளம் உண்டாம்!

சாத்தியக்கூறுகள் பற்றி சோதனை நடத்த ஆவல் இருக்கிறதாம்!

ஆனால் தொழில் நுணுக்க நிபுணர்களும் — கருவிகளும் இல்லாததால் தடைபடுகிறதாம்

பெங்களூர், ஜுன் 12—

தமிழகத்தில் காவிரி நதி பாயும் பகுதியில் மண்ணெண்ணெய்க்கான பரிசோதனைகள் நடத்த இந்தியப் பேரரசினர் தீர்மானித்திருக்கிறாகளாம்!

"தென்னாட்டில் மேற்கிலும், கிழக்கிலும் ஆற்றுக் கழிவெளிகளில் மண்ணெய்ணெய் கிடைக்கக் கூடுமென இந்திய பூகர்ப்ப நிபுணர்கள் கருதுகின்றனர். எண்ணெய் சாத்தியக்கூறுகள் பற்றி சோதனை நடத்த ஆசையிருக்கிறது; ஆனால், எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதற்கான போதிய தொழில் நுணுக்க நிபுணர்களும், கருவிகளும் இல்லாததால் வேலை தடைபடுகிறது. சாதனங்கள் கிடைத்ததும் வேலை துவங்கும்.

"இமாலய, விந்தியமலைச் சாரலில் எண்ணெய் ஊற்றுக்கால் ஓட்டமுள்ளதால், கட்ச், இராஜஸ்தான், கங்கைச் சமவெளி, மேற்கு வங்காளம், அசாம் பகுதிகளில் எண்ணெய் வாய்ப்பு அதிகம் இருக்கின்றன," என்றெல்லாம், மத்திய இயற்கை வள அமைச்சர் கூறியுள்ளார்.

பிரேதங்களை எரிக்க எரிப்புக் கருவிகள்!

கல்கத்தா, ஜுன் 12—

நகரங்களில் பிரேதங்களை எரிக்க புதிய எரிப்புக் கருவிகளைப் பயன்படுத்துமாறு பொது நிறுவனங்களை பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

தற்சமயம் இந்தியாவில் பயன்படுத்தப்படும் முறையினுல் எரிபொருள் வீணுவதாகவும், பொது சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அக்கம்பெனி எடுத்துக்காட்டியிருக்கிறது

மேற்படி கம்பெனியின் புதிய கருவியொன்று அமைக்க ரூ. 65 000 செலவாகும். இதில் ஒரு பிரேதத்தை எரிக்க ரூ. 8 செலவாகும்.

பதினெட்டு மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 400 கிராம சேவிகைகள், குடும்ப நிர்வாகப் பயிற்சி நிலையங்களில் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

செல்வாக்குப் பெறவே காங்கிரசில் சேருகிறார்களாம்!

கொள்கை குறித்துச் சிறிதும் சிந்திப்பதில்லை என்கிறார் தேபர்!

ஐதராபாத் ஜுன் 11—

"காங்கிரசின் கவுரவம், செல்வாக்கு ஆகியவற்றை எண்ணியே சிலர் காங்கிரசில் சேர்ந்திருக்கிறார்கள்; அவர்கள் காங்கிரசின் கொள்கைகள் பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை. அவர்கள், தங்களுக்குச் செல்வாக்கைப் பெற்றுக்கொண்டு, காங்கிரஸையே சுரண்ட துவங்கியிருக்கிறார்கள்"

என்று, இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையில், காங்கிரசுத் தலைவர் தேபர் கூறியுள்ளார்.

வடக்கில் வளரும் வளமிக்க திட்டம்

இந்தியாவின் பொருளாதாரச் செழிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகுமாம்!

பெருமிதம் பேசிப் பூரிக்கிறார், பண்டித பந்த்!

சமீபத்தில் மத்திய சர்க்கார் உள்நாட்டு அமைச்சர் பந்த் நங்கல் மின்சாரக் கால்வாய் திட்டத்திற்கு அருகிலுள்ள கோத்லாவில், இரண்டாவது மின்சார நிலையத்தைத் துவக்கிவைத்தார்.

கோத்லா மின்சார நிலையம், ரூ 4 80 00,000 செலவில் கட்டப்பட்டது; பக்ரா-நங்கல் திட்டத்தில், இது இரண்டாவது மின்சார நிலையமாகும்; முதல் நிலையம் 1956 ஜனவரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'பொருளாதாரச் சேமிப்பு அடைவதற்கு இந்தியா கொண்டுள்ள உறுதிக்கு பக்ரா-நங்கல் திட்டம் ஒரு எடுத்துக்காட்டாகும்; கோத்லா மின்சார நிலையம் அதில் ஒரு பகுதியாகும்' என்று அமைச்சர் கூறியுள்ளார்.

வளருகின்ற விந்தை!

கோத்லா மின்சார நிலையம் நங்கல் அணையிலிருந்து 18 மைல் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கோத்லா மின்சார நிலையத்தில், ஒவ்வொன்றும் 24 000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யவல்ல, இரண்டு உற்பத்தி சாதனங்கள் அமைக்கப்படும். அதே அளவு மின்சார சக்தி உற்பத்தி செய்யவல்ல மூன்றாவது உற்பத்திச் சாதனத்தை அமைப்பதற்கும் அதில் ஏற்பாடு உள்ளது.

கோத்லா நிலையத்தில், மின்சார உற்பத்தி செய்வதற்கான அதி நவீன இயந்திர சாதனங்களும், மற்றும் துணைச்சாதனங்களும், பாதுகாப்புச் சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த நிலையம், கால்வாய்க்கு மேல்புறத்தில் ஆறு மைல் தூரத்தில் உள்ள கங்குவால் மின்சார நிலையத்திலிருந்து விசேட சாதனங்கள், கேபிள் கம்பிகள் ஆகியவற்றின்மூலம் இயக்கப்படவிருப்பது இதில் உள்ள ஒரு விசேட அம்சமாகும்.

கங்குவால் மின்சார உற்பத்தி நிலையம்

பக்ரா—நங்கல் திட்டத்தில், முதலில் அமைக்கப்பட்ட கங்குவால் மின்சார நிலையம், பக்ரா அணைத் திட்ட நிர்மான வேலைகளுக்கும், பஞ்சாப், பெப்சு, டில்லி ஆகிய இடங்களில் உள்ள பல்வேறு நகரங்களுக்கும் மின்சாரத்தை விநியோகம் செய்து வருகிறது. இந்த மின்சார நிலையமும், கோத்லாவைப்போல் மொத்தம் 48,000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யவல்லதாகும். மூன்றாவது உற்பத்திச் சாதனத்தை அமைப்பதற்கு இங்கும் ஏற்பாடு உள்ளது.

பக்ரா அணையின் அடிவாரத்தில், அமைக்கப் படவிருக்கும் இரண்டு மின்சார நிலையங்களில், ஒன்றில் ஏற்கனவே வேலை நடைபெற்று வருகிறது. பக்ரா—நங்கல் திட்டத்தின் மின்சார நிலையங்கள் யாவும் பூர்த்தியானவுடன், அவை எல்லாம் சேர்ந்து மொத்தம் சுமார் பத்து இலட்சம் கிலோவாட் மின்சார சக்தியை உற்பத்தி செய்ய வல்லனவாக இருக்கும் இம் மின்சார நிலையங்களின் இணைப்பு நிலையங்கள், பஞ்சாப், பெப்சு, இமாசலப் பிரதேசம், டில்லி, இராஜஸ்தானின் பகுதிகள் ஆகியவற்றில் உள்ள நகரங்கள், கிராமங்கள், இரயில்வேக்கள், தொழில்கள் ஆகியவற்றுக்குத் தேவையான மின்சாரத்தை செய்துவரும்.

பிரதானப் பகுதிகள்

பக்ரா அணை, நேர்-புவிஈர்ப்பு அணை வகையிலும் உலகத்திலேயே மிகவும் உயரமானதாகும். இந்த அணை சட்லெஜ் நதி நீரைத் தேக்கி வைக்கும்.

பக்ரா அணை நீங்கலாக, திட்டத்தின் இதர பகுதிகள் யாவும் கிட்டத்தட்ட பூர்த்தியாகிவிட்டன 95 அடி உயரமுள்ள நங்கல் அணை 1954-ல் பூர்த்தி செய்யப்பட்டது. பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான் ஆகியவிடங்களில் உள்ள பிரேதசங்களுக்குக் கோடை மாதங்களில் இடைக்கால நிவாரணமளிப்பதற்காக 40 மைல் நீளமுள்ள நீர் மின்சார கால்வாயில் பாசனத்துக்காகத் தண்ணீர் விடப்பட்டது.

பக்ரா கால்வாய்த் திட்டம்

நங்கல் மின்சார கால்வாயின் நிர்மாணத்தின்போது பலவகைப் பட்ட சங்கடங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. வழி நடுவே குறுக்கிட்ட பல்வேறு குன்று வெள்ளப் பெருக்குகளைச் சமாளிப்பதற்காக, நடுநடுவே 58 வடிகால் வேலைத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. சுமார் 20 அடி ஆழமும், மேலே சுமார் 140 அடி அகலமும் கொண்ட இக்கால்வாயை, முழுதும் மனிதனின் முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு நதியென்றே கூறலாம். பக்ரா-நங்கல் திட்டம் 1959-60-ல் பூர்த்தியானவுடன் அதிகப்படியாக சுமார் 10 இலட்சம் டன் உணவுத் தானியத்தையும் 5,00,000 பேல்கள் பருத்தி, $1\frac{1}{2}$ இலட்சம் டன் கரும்பு ஆகியவற்றையும் உற்பத்தி செய்வதற்கு வகை செய்யுமென எதிர் பார்க்கப்படுகிறது. மற்றும அதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு, சிறு தொழில்களும் கனரகத் தொழில்களும் பெரும் அபிவிருத்தியடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நங்கல் நகர நிர்மாணம், இத்திட்டத்தின் முக்கியமானதொரு பகுதியாகும். இதைப் பூர்த்திசெய்யச் சுமார் ரூ. 2 கோடி செலவாகியுள்ளது திட்டத்தில் வேலைபார்க்கும் சுமார் 15,000 ஊழியர்களுக்கு, இக்காலனியில் இடவசதி ஏற்பாடு உள்ளது. மருத்துவச்சாலை, பள்ளிக்கூடங்கள், பொழுதுபோக்கு வசதிகள், தாய்-சேய் விடுதிகள், ஆகியவைபோன்ற பல்வேறு வசதிகளுக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பக்ரா-நங்கல் திட்டம் பூர்த்தியானவுடன், அதன் பாசனத தண்ணீர் விநியோகம் சப்ளை மூலம் கிராமவாசிகள் பயனடைவதோடு மட்டுமின்றி, மற்றும், கிராமங்களிலும், நகரங்களிலும் தொழில் வளப் பெருக்கத்துக்கும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புகளுக்கும் வழி ஏற்படும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

சீமானின் சிங்கார மாளிகைபற்றி வினோபா

'ஏழையின் குடிசையை இருட்டறையாக்கிவிட்டது!'

'கதிரவனின் ஒளியைக்கூடக் கட்டுப்படுத்திவிட்டார்கள்'

"கதிரவனது ஒளி எல்லோருக்கும் சமமாகத்தான் கிடைத்துக்கொண்டு வருகின்றதா? ஏழை ஒருவன், தன் குடிசையை கிழக்கு திசை நோக்கிக் கட்டியிருந்தான்; சூரிய ஒளி முதலில் அவனது குடிசையில்தான் விழுந்தது; ஆனால், சீமானொருவன் அவனது குடிசைக்கு முன்னால் சிங்கார மாளிகை எழுப்பியிருந்ததால், குடில் இருட்டறையாகிவிட்டது; இங்ஙனம், கதிரவனது ஒளியைக்கூட கட்டுப்படுத்திவிட்டார்கள் — தடை செய்துவிட்டார்கள் இதேமாதிரி தான் நிலத்தின் மீதும் சிலர் உரிமைகொண்டாடுகிறார்கள்," என்று, அவனூர் வரவேற்புக் கூட்டத்தில் வினோபா பாவே கூறியிருக்கிறார்.

தென்னாட்டில் இயற்கைச் செல்வம்

மற்றுமோர் பகுதியில் தென்படுகிறது

பாலக்கோல், ஜுன் 12—

இங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள கன்பாரார்த்தமான சிந்திப்பாவில் 52 அடி ஆழம் கிணறு தோண்டியபோது பூமிக்குள்ளிருந்து, பழுப்பு நிலக்கரிவாயுவும், இயற்கையான கரியமிலவாயுவும் வெளிவருவதாக ஐயமெழுந்தது.

தீக்குச்சி கிழித்துவைத்தபோது பெரும் தீ கொழுந்துவிட ஆரம்பித்தது உடனே மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள்.

பஞ்சாயத்து போர்டு தலைவர் வடி முனைக்குழாய்க் கிணறு வெட்ட 52 அடி ஆழம் தோண்டிய போது பூமியிலிருந்து கரியமில வாயு வெளிவரத் தொடங்கியது.

ஆந்திரப் பல்கலைக் கழக நில ஆய்வுக்குழு சில திங்களுக்குமுன் இதே பகுதியில் பூலபல்லி கிராமத்தில் சோதனை நடத்தி, பெட்ரோலும், பழுப்பு நிலக்கரி வாய்ப்பும் இருப்பதாகத் தெரிகிறது.

பணத்தைக் கொண்டு நிலத்தை மதிப்பிடுகிறார்கள்!

"ஒரு சிலர் கையில் நிலம் அகப்பட்டுவிட்டது; அவர்கள் பணத்தைக்கொண்டு நிலத்தை மதிப்பிடுகிறார்கள்; அதனால்தான், நிலத்தைப் பங்கிட வேண்டுமென்று சொல்லுகிறேன்," என்று, வினோபா பாவே. அவனூர் வரவேற்புக் கூட்டத்தில் கூறியிருக்கிறார்.

மணிக்கு 18,000 மைல் வேகத்தில் செல்லும் செயற்கைக் கிரகம் உருவாகுமா?

சந்திர மண்டலத்திற்குச் செல்ல முயற்சிக்கும் சாதனை 25 - ஆண்டுகளில் ஏற்பட்டுவிடுமாம்!

வாஷிங்டன்—

25 ஆண்டுகளில் மனிதன் சந்திரனை அடைய முடியுமென்றும், அங்கிருந்து கிரகத்துக்குக் கிரகம் பயணம் செய்ய முடியுமென்றும் அமெரிக்க தற்காப்பு இலாகாவின் தானாக இயங்கும் குண்டுப் பிரிவின் டைரக்டர் கூறுகிறார்.

1,000 மைல் உயரத்தில் பூமியைச் சுற்றி மணிஒன்றுக்கு 18 000 மைல வேகத்தில் பிரயாணம் செய்யக்கூடியதும், சுமார் 80 விஞ்ஞானிகள் தங்க வசதி அளிக்கக்கூடியதுமான ஒரு செயற்கைக் கிரகம் இப்பிரயாணத்துக்கு முன் அமைக்கப்பட வேண்டும்.

வான வெளியில் செல்லும் இத்தகைய செயற்கைக் கிரகம 10 அல்லது 15 ஆண்டுகளில் உண்மையாக ஏற்படக்கூடும். அதற்கு அடுத்த 10 ஆண்டுகளில் சந்திரனுக்குச் சென்று திரும்ப வசதியளிக்கும் விமானங்களும், கப்பல்களும் தயாரிக்கப்படக்கூடும்.

சென்னை அரசியலார் சிந்தனை செய்கின்றனர்

நீரழிவு—குடல் ரணம்போன்ற நோய்களுக்குப் 'பத்திய' உணவு

சென்னை, ஜுன் 12—

நீரழிவு, குடல் ரணம்-போன்ற நோய்களால் துன்புறவோர்களுக்கு முதல்தர 'பத்திய' உணவு கொடுக்க சென்னை அரசியலார் சிந்தித்து வருகிறது. இதற்கென சென்னை நகரிலுள்ள டாக்டர்கள் பயிற்சி ஆஸ்பத்திரி ஒன்றில் முதல்தர 'பத்திய' உணவு சமையலறை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதல்தர 'பத்திய' உணவு சமையலறை உள்ள மருத்துவ நிலையங்கள் சென்னை மாகிலத்தில் ஏற்கனவே 15 இருக்கின்றன.

இத்திட்டத்தின் கீழ் இந்தியப் பேரரசு சமையல் கருவிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6000-மும், சிப்பந்திகள் சம்பளத்திற்கும், 'படி'களுக்கும் ரூ. 8000-மும் தருவார்கள்.

செய்திச் சுருள்

★

சென்னை நகர மீனவர் சங்க மாநாடு

3—6—56 பிற்பகல் 3 மணிக்கு மயிலாப்பூர் முன்விக்குப்பத்தில் சென்னை நகர மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் மாநாடு திரு. என். ஜீவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. 20 கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தோழர்கள் கே. குப்புராஜ், எம். ஆர். சி. இராமச்சந்திரன், ஜி. பாஸ்கரன், கே. என் ஜெயராமன் ஆகியோர் பேசினர். கடலோர மீனவர்களை, 'மீனவர்' என்ற பொதுப் பெயரின் மூலமே சர்க்கார் நடைமுறையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், உத்தியோகப் பற்றற்ற மீனவர் ஆலோசனைக் குழுவொன்றை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அண்மையில் ஒரு மாபெரும் மீனவர் மாநாட்டைக் கூட்டுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மக்கள் முன்னேற்ற மன்றத் துவக்க விழா

3—6—56 மாலை 5 மணியளவில் வண்ணை சஞ்சீவிராயன் கோவில் தெருவில் மக்கள் முன்னேற்ற மன்றத் துவக்க விழா தோழர் மு. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். சங்கரன் மன்றத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் பலர் பேசினர். இறுதியாக தோழர் வே.கபிலன் அவர்கள் 'முன்னேற்றம்' என்ற பொருள் பற்றிப் பேசுகையில், 13-ம் நூற்றாண்டில் சிரித்தவனை யெல்லாம் பைசட்ரே சிறைச்சாலைக்கு கொண்டு போகப் பட்டதையும், சிந்தித்தவனை யெல்லாம் பாஸ்டில் சிறைச்சாலையில் தள்ளியதையும், அந்த இருவகையான கொடுமைநிறைந்த இடத்தை தகர்த்தெறிய பாடுபட்ட அறிஞர்களைப் பற்றியும், அவர்களைப்போல மக்கள்முன்னேற்றத்திற்காக துவக்கப்பட்ட மன்றம் பணி புரிய வேண்டுமென்று விளக்கிப் பேசினார்.

ஜே. எல். பாண்டியன் படிப்பகத் திறப்பு விழா

14—5—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு, குரும்பலாப் பேரியில் ஜே. எல். பாண்டியன் படிப்பகத் திறப்பு விழா திரு. சி சிவனுபாண்டியன் (நாடார், தலைமையில், திரு எஸ் கே. தங்கரத்தினசாமி (நாடார்) திறந்துவைத்தார். திரு. ஏ. ஜி. பால்துரை படிப்பகத்தின் பயன் பற்றிப் பேசினார்.

தாய்மார் கழகக் கூட்டம்

9—6—56 பிற்பகல் 3-30 - மணிக்கு சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டைத் தாய்மார் கழக மாதாந்திரக் கூட்டம் புலவர் மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெற்றது. 'இலங்கைத் தமிழர்' என்னும் பொருள் குறித்து இலங்கைச் செல்வி ஜி. பி. அமுதா சொற்பொழிவாற்றினார். மற்றும் தோழர்கள் அன்புப் பழம் நீ, சிறுவை மோகனசுந்தரம், தோழியர்கள் சுந்தராம்பாள், வெற்றிச் செல்வி, செல்வி வ. ந. வெற்றிச் செல்வி ஆகியோர் பல்வேறு பொருள் குறித்துப் பேசினர். தோழியர் வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் அனைவரையும் வரவேற்றார். தோழியர் கலைச்செல்வி நன்றி நவின்றார்.

கோவிந்தபுரம் சேரியில் தீ விபத்து

தி. மு. கழகத் தோழர்கள் உதவி

10—6—56 இரவு 1 மணியளவில் அரியலூர் அடுத்த கோவிந்தபுரத்தில் தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் சேரியில் தீ பிடித்து 30 வீடுகள்வரை எரிந்து சாம்பலாயிற்று. சுமார் ரூ. 30,000 வரை சேதம் ஏற்பட்டிருக்குமென அறிவிக்கப்படுகிறது.

தீப்பற்றிக் கொண்ட செய்தியறிந்த தி. மு. கழகத் தோழர்கள் திராவிடமணி, ஆறுமுகம். மற்றும்பல கழகத் தோழர்களும் விபத்து நடைபெற்ற இடத்திற்குச் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தனர்.

விடிமுந்த தாழ்த்தப்பட்டோர் சுமார் 2,030 பேர்களுக்கு கிராமத் தலைவர் தோழர் இராமசப்பு (பிள்ளை) பகல் உணவு அளித்தார். ரெவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார் ஆகியோர் சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டுவிட்டு ஆவன செய்வதாகக் கூறிச்சென்றனர்.

கீழப்பாவூர் மறுமலர்ச்சி நாடக மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் வீ. மா. முத்தரசு தலைமையில் நடைபெற்றப்போது, வருகிற செப்டம்பர் 17, 18-ந் தேதிகளில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக ஆண்டு விழாவில் இரண்டு நாடகங்கள் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற்காக நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

சென்னை இராயபுரம் இலக்கிய மன்றம்

10—6—56 காலை 10 மணியளவில் பனைமரத் தொட்டி, அட்டபாளையம் கண்ணபிரான் பஜனைக் கோவிலில் மேற்படி மன்றச் சார்பில் ஓர் இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம் தோழர் அ. ஆடியபாதம் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. செ. சிவப்பிரகாசம், 'புகழேந்தியின் புலமைத் திறன்' என்பது பற்றியும், தோழர் ம. செல்வராசன், 'தமிழ் மொழிச் செல்வம்' என்பது குறித்தும் பேசினர்.

விருதுநகர் எம். எஸ். பி. படிப்பகக் கூட்டம்

11—6—56 இரவு 8 மணிக்கு, படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் மு. கருப்பையா தலைமையில் நடைபெற்றபோது, நடிகை எம். ஆர். சந்தானலட்சுமியின் மறைவுக்கும், அழகிரியின் மனைவியார் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், நான்காவது வார்டு பிள்ளைமார் பஜனைமடத் தெரு, பாவப்பட்டித் தெருக்களில் சிமெண்டு காங்கிரீட் போடும்படி நகரசபைத் தலைவரையும் ஆணையாளரையும் கேட்டுக்கொண்டும், படிப்பக ஆண்டு விழாவை ஜுலை மாதம் நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர், தோழர்கள் க. திரவியம்—செயலாளர்; கே. சுப்பிரமணியன்—துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணம்

6—6—56 காலை, தாரமங்கலத்தில், தோழியர் செல்வலட்சுமி—தோழர் சீனிவாசன் திருமணம் தோழர் ப. கண்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. எ. முருகேசன், டி. பி. ஆறுமுகம், அரு. ஸ்டீபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு பரிசுகளும், பாராட்டுரைகளும் வழங்கப்பெற்றன. இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

‘சர்வாதிகாரப் போக்கில் எதையும் செய்யக் கூடாது!’

‘புதிய தசாம்ச நாணயங்கள் குழப்பத்தை விளைவிக்கும்’

சுருக்கு வழிக் கணக்கு அட்டவணையில் குறைபாடுகள் இருக்கிறதென்கிறார் ஆச்சாரியார்

சென்னை, ஜுன் 13—

“புதிய தசாம்ச நாணயங்களுக்கும், இப்போதுள்ள நாணயங்களுக்குமிடையே விகிதாச்சாரத்தை நிர்ணயித்து நிதி இலாகா வெளியிட்டுள்ள சுருக்குவழிக் கணக்கு அட்டவணை படித்தவர்களையே குழப்பம் அடையச் செய்கிறது. எனவே படிக்காத பாமர மக்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

“நாட்டு மக்கள் அனைவரையும் பாதிக்கக்கூடிய பெரிய மாற்றங்களை நாம் செய்வோமானால் நாம் சர்வாதிகாரப் போக்கில் எதையும் செய்யக்கூடாது; முதலில் தீர்மானித்ததை மாற்றிக்கொள்ள விரும்பாமலும் இருக்கக்கூடாது.”

—இவ்வாறு, சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், புதிய தசாம்ச நாணய (நயா பைசா) முறைப்பற்றிக் கூறுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் அவர் கூறியுள்ளதாவது :—

“பைசாவிற்கு இப்போதுள்ள மதிப்பை அப்படியே வைத்துக்கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ள தசாம்ச முறையை மேலேயிருந்து கணக்கிடுவதற்குப் பதிலாகக் கீழேயிருந்து கணக்கிட்டால், சுருக்குவழிக் கணக்கு அட்டவணைக்கே அவசியம் இருக்காது,” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“எனது கருத்தை ஏற்றுக் கொள்வதற்குக் காலம் கடந்துவிடவில்லை; இதை நிதிமந்திரி ஏற்றுக் கொள்ளும்படி என்னால் செய்ய இயலாமைக்கு நான் வருந்துகிறேன். பைசாவின் இப்போதைய மதிப்பை அப்படியே வைத்துக்கொண்டு ஒரு ‘நயா ரூபாய்’க்கு 100 நயா பைசா’ என்று கணக்கிட்டால் அதனால் தொல்லைகள் ஏற்படாதென்பது எனது கருத்து அப்போது சுருக்குவழிக் கணக்கு அட்டவணைக்கே தேவை ஏற்படாது.

“சில்லரை பேரங்களில் ஏற்படக்கூடிய தகராறுகளை இந்த அட்டவணையால் தீர்க்கவே முடியாது; ஆனால், இவற்றை என் யோசனைகளினால் தீர்க்க இயலும். ரூபாய் பேரங்களிலும் தொல்லை ஏற்படாது.

“நான் கூறும் ஆலோசனை மிக எளிதாகும். இப்போதுள்ள பைசாவின் மதிப்பு அப்படியே இருக்கவேண்டும். ரூபாய்க்கு 100 பைசாக்கள் இருக்க வேண்டும். இப்போது 64 பைசாக்கள் கொண்டது ஒரு ரூபாய் என்று வழக்கில் உள்ளது; நான் கூறும் புதிய முறைப்படி 100 பைசாக்கள் கொண்டது ஒரு ரூபாய் ஆகும். அப்போது ரூபாயின் மதிப்பு அதிகமாகும். அதாவது நான் கூறும் புதிய ரூபாயின் மதிப்பு இப்போதுள்ள முறைப்படி ரூ. 1—9—0-க்குச் சமமானதாகும். இதனால் வெளிநாட்டு நாணயங்களோடு ஒப்பிடுகையில் 1 ரூபாய்க்கு 18 பென்ஸ் என்ற மதிப்புப் போய் 1 ரூபாய்க்கு 28 125 பென்ஸ் என்று ஆகும்.

“16 புதிய ரூபாய்கள் 25 பழைய ரூபாய்களுக்குச் சமமாகும்.

“இப்போது ரூ. 100 சம்பளம் வாங்குகின்றவன் 64 புதிய ரூபாய்கள் வாங்குவான். இப்போதுள்ள ரூபாய்க்கு 192 தம்பிடிகள் என்பது மாறி 300 தம்பிடிகள் என்று ஆகும்.

“இம்முறையைப் பின்பற்றுவார்களானால் குழப்பத்தை நன்கு தவிர்த்துவிடலாம். கிராமாந்திரப் பகுதிகளில் வாழும் மக்களும், வியாபாரம் செய்கின்றவர்களும், பொருள்களை வாங்குகின்றவர்களுமாகிய அனைவருக்கும் குழப்பமேற்படாது. இதனால் இப்போதுள்ள சில்லரை நாணயங்களின் மதிப்பு அப்படியே இருக்கும்.

“ஆனால், இப்போது வெளியாகியுள்ள சுருக்கு வழிக் கணக்கினால் பாமரர்கள் மாத்திரமின்றிப் படித்தவர்களும் குழப்பமடைவர் என்பது உறுதி.

“சுருக்கு வழிக் கணக்கு அட்டவணைப்படி பார்த்தால், பேரங்களின்போது பணத்தின் பின்னங்கள் கணக்கிடப்படாமல் விடுபட்டு விடுகிறது. ஏழை நாடாகிய நம் நாட்டில் பணத்தின் சிறு பின்னத்தையும் கணக்கிடாமல் எப்படி விட்டுவிடுவது?

“எனவே, என் யோசனையை ஏற்பது நல்லது, காலம் கடந்துவிட்டது என்று கூறுவதில் பயனில்லை. பல பேசப்படுகின்றன; ஆனால், ஒன்றும் செய்யப்படுவதில்லை. நான் கூறிய யோசனை வெளிப்படையாக விவாதிக்கப்படவும் இல்லை. பாராளுமன்றத்தில் இப்பிரச்சினையை யாராவது எழுப்புவர் என எதிர்பார்த்தேன்; ஆனால், ஏமாந்தேன்; எனினும், இப்போதும் காலம் கடந்துவிடவில்லை.

‘புதிய நாணயங்கள் பற்றி ஏற்கனவே வெளியிட்டாய் விட்டதே’ என்பதைப் பொருட்படுத்தாமல் என் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், பேரம் செய்கின்றவர்களுக்கும் நஷ்டமாகாது; குழப்பமும் ஏற்படாது.”

★

புதிய காசுகளைக் கணக்கிடும் வழி:

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு இப்போதுள்ள தம்பிடி, காலணு, அரை அணு, ஒரு அணு முதலியவற்றிற்குப் பதிலாக ‘நயா பைசா’ என்ற பெயருடைய புதிய காசுகளை இந்திய அரசாங்கம் வெளியிட முடிவு செய்துள்ளது என்பதை வாசகர்கள் உணருவர். புதிய காசுகள் வந்த உடனேயே பழைய காசுகள் ஒழிக்கப்படமாட்டா. 3 ஆண்டுக் காலம் வரையில் பழைய காசுகள் புழக்கத்தில் விட்டு வைக்கப்படும். எனவே, புதிய காசுக்கும் பழைய காசுக்கும் வேறுபாடு தெரியாமல் பொது மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவது உறுதி. இக்குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசாங்கம் ஒரு சுருக்குவழிக் கணக்கு அட்டவணையை வெளியிட்டுள்ளது. அவ்வட்டவணையைக் கொண்டு புதிய காசுகளுக்கும்—பழைய காசுகளுக்கும் உள்ள தொடர்பை அறிந்துகொள்ளலாம் எனக் கூறப்படுகிறது.

அந்த அட்டவணை வருமாறு :—

	தம்பிடிகள்			
	0	3	6	9
	‘நயா பைசா’க்கள்			
0	0	2	3	5
1	6	8	9	11
2	12	14	16	17
3	19	20	22	23
4	25	27	28	30
5	31	33	34	36
6	37	39	41	42
7	44	45	47	48
8	50	52	53	55
9	56	58	59	61
10	62	64	66	77
11	69	70	72	73
12	75	77	78	80
13	81	83	84	86
14	87	89	91	92
15	94	95	97	98
16	100	”	”	”

அட்டவணையை உபயோகித்துப் புதிய காசுக்கும் பழைய காசுக்கும் உள்ள தொடர்பை அறிவது எப்படி என்பது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருவரிடம் 5½ அணு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்; அட்டவணையின் முதல் பத்தியில் 5 என்று போட்டு இருக்கும் இடத்தில் விரலை வைத்து அப்படியே நேராக நகர்த்திச் செல்ல வேண்டும்; அரை அணு பத்தியில் விரல் வந்தவுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும்; அங்கு 34 என்று போடப்பட்டிருக்கும். எனவே 5½ அணுவுக்கு 34 ‘நயா பைசா’க்கள் என்று கொள்ள வேண்டும். இந்த மாதிரியாக 1 அணுவிலிருந்து 16 அணு வரையில ‘நயா பைசா’க்கள் எவ்வளவு என்று கணக்கிட்டுக்கொள்ளலாம்.

ஆசிரியர் குறிப்பு: இந்த அட்டவணையைப் பயன்படுத்திப் பார்க்கையில், நாணயங்களின் பின்னம் சரியாகக் கணக்கிடப்படாமல் விடுபட்டு விடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபற்றிய அரசாங்க அறிக்கை நமது இதழில் தரப்படும்.

கைது செய்து காவலில் வைக்க உத்தரவு

‘பலூசிஸ்தான் காந்தி’ என அழைக்கப்படும் சகோதரத்துவ நிறுவனத்தின் தலைவர் சமாதகானை, கைது செய்து காவலில் வைக்க மேற்கு பாகிஸ்தான் துணை கமிஷனர் ‘வாரண்ட்’ பிறப்பித்துள்ளதாக குவெட்டா பத்திரிகையொன்று அறிவிக்கிறதாம்.

சமாதகான மக்களிடையே துவேஷத்தைப் பரப்பி வருகிறார் எனக் குற்றம் சாட்டி, பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கல்லக்குடி போராட்டத்தில் குண்டு காயம்பட்ட இரு தோழருக்கு தி. மு. க. சார்பில் நிதி அளிப்பு

★

16—6—56 சனி மாலை 6-மணிக்கு பூவாளூர் ‘மார்க்கெட்’ மேல்புறத்தில்

பொதுக் கூட்டம்

★

தலைவர் :

அம்பில் தர்மலிங்கம்

பேசுவோர் :

என். வி. நடராசன்

அ. பொன்னம்பலனார்

எம். எஸ். மணி

குறிப்பு : கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டு அரசியலாரின் அடக்கு முறைக்கு ஆளாகி அங்கஹீனர்களான தோழர்கள் சந்தானம் ஜோசப், செபாஸ்தியன, ஆகிய இருவருக்கும், தலைமைக் கழகச் சார்பில், துணைபொதுச்செயலாளர் என். வி. நடராசன் நிதி வழங்குவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இராமநாதபுரம் மாவட்டத்தில்

அண்ணு

சுற்றுப் பயணம்

★

ஜுன் 15 : மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
„ 16 : மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
„ 17 : —அருப்புக்கோட்டை

அண்ணு அவர்களுடன் தோழர்கள் கண்ணதாசன, எம். எஸ். இராமசாமி, முகவை. ஆர். எஸ். பாண்டியன ஆகியோரும் கலந்து கொள்வர்.

கழகக் கூட்டம்

★

சங்கராபுரம்

16—6—56 மாலை 5 மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர் : அ. மருகு

பேசுவோர் :

ஈ. வெ. கி. சம்பத்
நா. பெ. கேசவன
ந. நாச்சியப்பன்

‘வெற்றதனல்’ — நாடகம்

16—6—56 இரவு 9-மணிக்கு சென்னை—சௌந்தர்ய மகாலில், வேல் விநோதகான சபையாரின் ‘வெற்றதனல்’ நாடகம் நடைபெறும்

மத்திய கிழக்குப்……

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வெளியேறியதைப் பற்றி ஒரு ஆங்கிலேயப் பிரமுகர் குறிப்பிடுகையில், ‘நாங்கள் அமைதியாகவும், பெருந்தன்மையோடும் வெளியேறுகிறோம்; ஒப்பந்தத்தில் கண்டபடி நாங்கள் அப்படியே நடக்கிறோம். உண்மையைக் கூறவேண்டுமானால் ஒப்பந்தத்தில் கண்டுள்ளதற்குச் சில நாட்கள் முன்னதாகவே நாங்கள் வெளியேறுகிறோம்” என்று சொன்னார்.

எகிப்து அரசாங்கம் அடுத்த திங்களன்று ஆங்கிலேயர் வெளியேறிய நாளைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

தலைமைப் பதவி நீடிப்பு

புதுடில்லி, ஜுன் 13—

காங்கிரசுத் தலைவர் தேபரின் தலைமைப் பதவி அடுத்த ஆண்டு சனவரித் திங்களோடு முடிவுறுகிறது ஆனால், அவர் இன்னும் ஓராண்டுப்பதவியில் நீடிக்கவேண்டுமென காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

‘பகுத்தறிவு’

வார இதழ்

“‘பகுத்தறிவு’ திங்கள் இதழை வார இதழாக வெளியிட முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதால் ஜுன் மாத இதழ் நிறுத்தப்பட்டுள்ளது.

“‘பகுத்தறிவு’ வார இதழ், ஜூலை முதல்வாரம் தொடங்கி, வெள்ளிதோறும் சேலத்தினின்றும் வெளிவரும் என்பதை அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதோடு, பட்டியல் பாக்கி வைத்துள்ள விற்பனையாளர்கள் கருணைகூர்ந்து தொகையினை அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்,” என்று, ஆசிரியர் ப. கண்ணன் அவர்கள் அறிவிக்கிறார்.

முகவரி :—

ஆசிரியர், ‘பகுத்தறிவு’,
மேற்குத் தெரு,
குமாரசாமிப் பட்டி,
சேலம் நகரம்.

இளைஞர் முன்னேற்றமன்ற 2-வது ஆண்டுவிழா

16—6—56 மாலை 5-மணிக்கு, சென்னை—வண்ணை, மணிகண்ட முதலி 3-வது சந்தில் (ராபின்சன பார்க் சமீபம்), தோழர் கே. எஸ். அருணாசலம் தலைமையில், மேற்படி மன்ற 2-வது ஆண்டு விழா நடைபெறும்.

தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. பி. சிற்றரசு, என். ஜீவரத்தினம்; சி. ஆர். பாலசுந்தரம், மாணவி—சற்குணம் ஆகியோர் பேசுவர்.

சென்னை 5-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கு :

15—6—56 இரவு 7-மணியளவில், கிளைக் கழக இல்லில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

மீ. சு. இளமுருகு

சுற்றுப் பயணம்

ஜுன் 16 : ரேனூர்
21 : பெரியகுளம்
30 : மீனாட்சிபுரம்
(கோவை மாவட்டம்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.